IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**CC. 10/2021 Date : 12.05.2026 D.W.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவகுருநாதன் | ஆதார்எண் | |
| தந்தை பெயர்; | சிவராஜ் | தொழில் | பல் மருத்துவர் |
| கிராமம் | ஸ்ரீபெரம்புதூர் | வயது | 47 |
| புகார்தாரர் மற்றும் எதிரி ஆஜர். வழக்கறிஞர்கள் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**எதிரி தரப்பு முதல் விசாரணை**

எனக்கு ஆஜர் எதிரி ரமேஷ் என்பவரை தெரியும். ஸ்ரீபெரம்பதூரில் வசித்து வருகிறேன். எனக்கும் எதிரி ரமேஷ்க்கும் 2018 , 2019 ஆண்டில் கொடுக்கல் வாங்கல் இருந்தது. என் அப்பா , அம்மா என் அண்ணன் சிவசரவணன் என்பவருடன் வசித்து வருகிறார். 2020, 2021 கோவிட் காலத்தில் என் அப்பா, அம்மா என்னுடன் வசிக்கவில்லை. எதிரி ரமேஷ் அவருடைய வங்கி கணக்கில் இருந்து ரூ. 50 ஆயிரம் எனது வங்கி கணக்கிற்கு அனுப்பி உள்ளார். என் அப்பா அவரது பிரமாண வாக்குமூலத்தில் எனக்கு தெரியாமல் என்னுடைய மகன்கள் எதிரியுடன் கொடுக்கல் வாங்கல் வைத்துகொள்ளவில்லை என்று கூறியுள்ள விவரம் எனக்கு தெரியாது. என் அப்பாவிற்கு கொடுக்க வேண்டிய தொகைக்காக எதிரி ரமேஷ் என்னுடைய வங்கி கணக்கிற்கு தொகை அனுப்பவில்லை.

-

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என் தந்தை உளுந்தூர்பேட்டையில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். நான் எத்தனை ஆண்டுகளாக ஸ்ரீபெரம்புதூரில் வசித்து வருகிறேன் என்றால் 2012 முதல் வசித்து வருகிறேன். எனது தந்தையை பார்க்க விஷேச நாட்களில் மட்டுமே வருவேன் என்றால் சரிதான். என் தந்தை மருத்துகடை வைத்து நடத்தி வருகிறார் என்றால் சரிதான்.

2. என் தந்தையின் கொடுக்கல் வாங்கல் பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். என் தந்தை கொடுக்கல் வாங்கல் பற்றி என்னிடம் சொல்வதும் இல்லை. எதிரி ரமேஷ் எங்களது பூர்வீக ஊரான அனந்தபுரத்தை சேர்ந்தவர் என்று சொன்னால் சரிதான். அந்த பழக்கத்தில் கைமாற்றாக என்னிடம் எதிரி பணம் வாங்குவார் என்றால் சரிதான்.

3. அவ்வாறு எதிரி என்னிடம் கைம்மாற்றாக வாங்கிய

தொகைகாக தான் எனது வங்கி கணக்கிற்கு எதிரி ரூ. 50 ஆயிரம் அனுப்பினார் என்றால் சரிதான்.

மறுவிசாரணை – இல்லை.

Typed by E.Veeramani

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

V GOMATHI

Digitally signed by V GOMATHI
Date: 2026.05.12 19:46:14 +0530

Judicial Magistrate-I,
Ulundurpet.